# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

நதிமூலம் காண்போம்



www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 17. நதிமூலம் காண்போம் !

அவன் என்ன அப்படிப் பேசுகிறான்? யானைக்கு அர்ரம் என்றால் குதிரைக்குக் குர்ரம் என்கிறான்.

ஏட்டிக்குப் போட்டி என்பதெல்லாம் நம்மிடம் ஒத்து வராது; வேறு இடத்தில் வைத்துக் கொள்.

அது ஒரே கசமுசா வாகப் பேசப்படுகிறதே. உனக்குத் தெரியாதா?

அந்தப் பயல் திமிர் பிடித்துத் தலைகால் தெரியாது ஆட்டம் போடுகிறான்.

---

*தேடலின் நிறைவில், இலக்கியம் இருப்பதைப் பல தேடல்களில் கண்டு பூரித்தேன். முன்னோர் வாழ்வியல் அனுபவங்கள்தாம் எத்துணை எழிலோடு, மாற்று உருவம் பூண்டு வாழ்வோடு கலந்து, வாக்கில் வெளிப்படுகின்றன.*

---

உழக்கில் கிழக்கு மேற்கு வேண்டிக் கெடக்குது . வாயை மூடுடா.

அந்தப் பயல் வாய்க்கு வந்தவாறு, கன்னா பின்னா என்று திட்டிட்டுப் போறான்.



www.saivamonline.com

இவையும், இவைபோலும் நூற்றுக் கணக்கான தொடர்களை நாம் நாளும் பேச்சில் பயன்படுத்தி வருகிறோம். இவை எல்லாம் என்ன? இவற்றின் உண்மைப் பொருள்கள்தாம் யாவை? எங்கிருந்து இவை வந்தன என்று தேடத் தொடங்கினேன். நதி மூலம், ரிஷி மூலம் காண முடியாது என்பார்களே. இவற்றின் உண்மையான மூலம் எவை என்று கண்டு தெளிவதும் கடினமாகத்தான் இருந்தது. முயன்று, முதன் முதலாக மூலத்தை முன்வைத்துள்ளேன். தேடலின் நிறைவில், இலக்கியம் இருப்பதைப் பல தேடல்களில் கண்டு பூரித்தேன். முன்னோர் வாழ்வியல் அனுபவங்கள்தாம் எத்துணை எழிலோடு, மாற்று உருவம் பூண்டு வாழ்வோடு கலந்து, வாக்கில் வெளிப்படுகின்றன. நீங்களும் தேடிப் பாருங்களேன். ஒரு புதையல் கிடைத்த மகிழ்ச்சியை உணர்வீர்கள்!.

## காமா சோமா

நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். பெரிய மகளுக்குத் திருமணம் முடித்திருந்தார். சொந்தக்கார பையன் வீட்டோடு மாப்பிள்ளையாக வந்திருந்தான். அறிமுகம் செய்து வைத்தார். வெளியில் மாப்பிள்ளை சென்றதும், மாப்பிள்ளை எப்படி நடந்து கொள்கிறார் என்று கேட்டேன். அதை ஏன் கேட்கிறாய், காமா சோமா என நடக்கிறார். மாப்பிள்ளை ஆயிற்றே தட்டிக் கேட்கவா முடியும்? நண்பர் அங்கலாய்த்துக் கொண்டார்.

நான்கேட்டேன், அது சரி, காமா சோமா என்றால் என்ன? அதான், மாமனார் என்று என்னை மதிப்பதில்லை. நேரில் நடிக்கிறார், மகளிடம் சீறுகிறார்; மனைவியோடு பிறந்த பெண்களிடம் எரிந்து விழுகிறார்; தன் இஷ்டப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறார். நான் வருந்தினேன்.

காமா சோமா என்னுள் வினாவை எழுப்பிற்று, காமா சோமா என்றால் என்ன? எதைக் குறித்தன அல்லது, யாரைக் குறித்தன. சொற்களை உற்று நோக்கத்தொடங்கினேன்.

பொறுப்பில்லாது நடந்து கொண்ட, யாராவது இருவராகவே இருக்க வேண்டும் என்று உள்மனம் சொன்னது. காலா இங்கே வாடா என்று பாரதி அழைப்பது பொறிதட்டியது. காலனைத்தான் அவர் காலா என்று விளிக்கிறார்.

அப்படியானால்? புரியவந்தது!



www.saivamonline.com

காமா என்றால் காமன் - மன்மதன்
சோமா என்றால் சோமன் - சந்திரன்

சக மனிதர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் செயல்களை, நடத்தைகளை மதிப்பீடு செய்வதில் தமிழ் இலக்கியங்களும், இலக்கியப் பாத்திரங்களும் இங்கே பெரிதும் பயன் கொள்ளப்பட்டு வருதல் உண்டல்லவா?

இராம - லட்சுமணர் போல! பொண்ணு மகாலட்சுமி மாதிரி இருக்கா! சரியான கும்பகர்ணன்! உன் சகுனி வேலையை நம்பகிட்ட காட்டாதே! காமன், சிவனின் மானசீகப்புதல்வி இரதி தேவியை மணந்தவன். கயிலையில் யோகத்திலிருந்த சிவன் மீது மலரம்பு செலுத்தினான். சிவனிடம் மாமனார் தானே என்ற அலட்சியம் காட்டினான். சாம்பலானான்.

சோமன், தட்சனின் 27 மகள்களை மணந்தவன். ஒரு மகளாகிய உரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்தினான். தட்சன் தரையில் தேய்த்தான். சிவன் அடைக்கலம் தந்தார். காமா - சோமா புரிந்தது! மன்மதனுக்கு இன்னும் உருவம் கிடைக்கவில்லை! சந்திரனோ, தேய்ந்து வளர்ந்து அல்லாடுகிறான். மாப்பிள்ளைகளே! உங்களைத்தாம்; காமா சோமா என்று நடந்து கொள்ளாதீர்கள்.

## காடோ சரணமோ

அந்தப் பெரியவரை நான் சந்தித்திருக்கக் கூடாது. என் பொல்லாத காலம், நடுத்தெருவில் மடக்கி நிறுத்தினார். ஐயா! எப்படி இருக்கிறீர்கள்? பாசாங்காகக் குசலம் விசாரித்தேன். ஏதோ காடோ சரணமோ என்றிருக்கிறேன் என்று அலுத்துக்கொண்டார். அவருக்கு ஒரே மகன்; மகா கெட்டிக்காரன். பெரிய படிப்புப் படித்தது விட்டு, மேலை நாடு ஒன்றில் பாரதி மாதிரி கூறுவதானால் மேற்கு நாடு ஒன்றில், கை நிறைய சம்பாதிக்கிறான். கல்யாணம் இன்னும் ஆகவில்லை. அப்பா அம்மாவை மதிப்பவன். அவனோடு போய் ஆறு மாதம் தங்கிவிட்டு, அண்மையில்தான் இருவரும் தாயகம் திரும்பியிருந்தனர்.

ஏன் அலுத்துக் கொள்கிறீர்கள்? பின்னே! அவன் அங்கிருக்கிறான். இவளுக்கு மேலை நாடு பிடிக்கவில்லை! காடாறு மாதம், நாடாறு மாதமாக நான் அல்லாடி அலைகிறேன். இது, விக்கிரமாதித்தியன் கதையில் அல்லவா வருகிறது.



www.saivamonline.com

அவர் சொன்ன காடோ சரணமோ... என்னைச் சிந்திக்கத் தூண்டியது. மகனோடு வாழ்வதா? மனைவியோடு வாழ்வதா? தீர்மானிக்க இயலாத நிலையில் தடுமாறும் பெரியவர் வாயிலிருந்து வந்த தொடரல்லவா? காடு - புரிந்தது? அது என்ன சரணம்! எங்கோ கேட்ட நினைவு! ஓ புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி!

உள்ளூரில் சாமியே சரணம் ஐயப்பா! ஓ, திருவடிகளை அல்லவா குறித்துள்ளது. காடு - திருவடி , அருகில்வைத்துப் பார்த்தேன். பொறி தட்டியது. அட, நம்முடைய இராமாயணம்! கைகேயி சூழ்ச்சியால் இராமன் காடு சேர்ந்தான். அன்புத் தம்பி பரதன் துடித்தான்; காடு சேர்ந்தான். இராமன், சமாதானப் படுத்தி நீயே ஆள் என்று அன்புக் கட்டளை இட்டான். பாரத நாட்டில் ஆட்சிக் கட்டில் வேண்டாம் என்று மறுத்த முதல் மனிதன், இவ்வாறு பாரத நாட்டுக்குப் பெருமை சேர்த்ததால்தான் அவனைப் பரதன் என்றார்களோ! இராமன் திருவடிகளை வேண்டிப் பெற்று அரியணையில் வைத்து 14 ஆண்டுகள் ஆண்டான்.

இராமனும் பரதனும் உத்தமர்கள்

அந்த 14 அண்டுகளில் அயோத்திமக்கள்

இராமனோடு காடு செல்வதா, பரதனோடு நாட்டில் வாழ்வதா என்று தடுமாறியதைத்தான் பெரியவர் காடோ சரணமோ என்றிருக்கிறார். இலக்கியம் வாழ்வாகும் போது எப்படிச் சுவைக்கிறது பார்த்தீர்களா?

## மொந்தன் வாங்கிவா?

அன்று கண்ணன் பிறந்த நாள். ஞாயிற்றுக்கிழமை வேறு. என் மனைவி, அவளுக்குப் பிரியமான தாய் விட்டுக்குச் சென்றிருந்தாள். கொல்லையில் என்னைப் பார்த்து விட்ட அடுத்த வீட்டுக்காரர், மதிய உணவுக்கு விரும்பி அழைத்தார். சீடை முறுக்கில் எனக்கு அலாதி பிரியம். பண்டிகைகளோடு, பலகாரங்களை இணைத்த முன்னோர்கள் எவ்வளவு புத்தி சாலிகள். பகல் ஒரு மணி; படையல் நேரம், நண்பர் வீடு சேர்ந்தேன். அவர் தன் பத்து வயது மகனைத் திட்டிக் கொண்டிருந்தார். நான், பையனை அரவணைத்துக் காரணம் கேட்டேன்.

பின்னே? வாழைப்பழம் வாங்கிவா என்றால், பேயன் பழம் வாங்கி வந்து நிற்கிறான். அதனால் என்ன? இதை வைத்தே படைக்கலாமே! அதெப்படி! கண்ணனுக்கு மொந்தன் பழந்தான் உகந்தது.



www.saivamonline.com

பையனை, மொந்தன் வாங்கத் திருப்பி அனுப்பினார். கண்ணனுக்கு மொந்தன்பழம் வந்தது. பேயன் பழம் திருப்பப்பட்டது. கண்ணன் வாழ்க! வயிறார உண்டு மகிழ்ந்தேன். வீடு திரும்பியதும் அந்த மொந்தன் பழம், என்னைத் தூங்க விடவில்லை. செவ்வாழை புரிகிறது! பச்சை வாழை, மலை வாழை எல்லாம் சரி! வேண்டிய மொந்தன், வேண்டாத பேயன் என்ன அவை? இல்லை யார் அவர்கள். பளீர் என்று, ஒரு மின்னல் வெட்டு! கண்ணனுக்கும் மொந்தனுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இல்லாமலா அந்தப் பழம் படைக்கும் வழக்கம் வந்திருக்கும்?

வானொலியில் கிருஷ்ணா, முகுந்தா, முராரி... என்று ஒரு பெண் பாடிக் கொண்டிருந்தார். எல்லாம் ஓங்கி உலகளந்த உத்தமனாகிய ஸ்ரீ நாராயணனின் நாமங்கள் அல்லவா? முகுந்தாவை அசைப்போடத் தொடங்கினேன். முகுந்தன், மொந்தன் பளீர் என்று தொடர்பு புலனாயிற்று. புதையல் கிடைத்த மகிழ்ச்சி! முகுந்தனாகிய கண்ணனுக்கு மொந்தன் வாழை சரிதானே! மனம் குதூகலம் அடைந்தது. திருப்பிக் கொடுத்த பேயன்? பித்தன், பேயன் எல்லாம் சிவன் நாமங்கள் அல்லவா? சிவனுக்கு உகந்த பழம் பேயன்! ஒன்று பாக்கி பூவன். சரிதான், பூமேல் இருக்கும் பிரமனுக்கு உகந்தது பூவனாகத்தானே இருக்க முடியும். முப்பெரும் தெய்வங்களோடு மூன்று வாழைக்கனிகளை இணைத்த முன்னோரை, மனம் குவிந்து வணங்கத் தொடங்கியது.

## பிக்கல் புடுங்கல்

கல்யாணத்தரகர் வந்து வந்து போய்க் கொண்டிருந்தார். பஜ்ஜியும், சொஜ்ஜியும் காலியாகிக் கொண்டிருந்தன. என்னையா? நம்ம பொண்ணுக்கு ஒரு நல்ல பையனை எப்ப கொண்டாரப் போறீங்க? நான் கேட்டேன். அம்மா பச்சைக் கொடி காட்டலிங்களே! அம்மாவை இன்றி, ஓர் அணுவும் அசையாத வீடு என்னுடையது. என் மனைவி மதுரைக்காரி, எல்லாம் மீனாட்சி ஆட்சிதான். அம்மா நீங்க சொல்லுங்க! எப்படிப்பட்ட இடமாக இருக்க வேண்டும். தரகர் கேட்கிறார். பிக்கல் புடுங்கல் இல்லாத இடமாகப் பாருமையா! சரி என்று தரகர் விடைபெற்றார்.

படித்த இடம் என்றால் புரிகிறது! பணக்கார இடம் என்றாலும் புரிகிறது! மனைவியிடமே கேட்கலாமா? அது என்ன பிக்கல் - புடுங்கல்? என்ன படிச்சிங்களோ? எல்லாத்தையும் நானா விளக்க முடியும்? அவள்! தரகரிடம் கேட்கவும், தன்மானம் இடம் தரவில்லை. மனைவிக்கும்



www.saivamonline.com

தரகருக்கும் புரிந்த சங்கேத பாஷை நமக்கு மட்டுப்படவில்லையே! சுய சிந்தனையை முதன் முதலாகத் தட்டி விட்டேன்.

பெண் வாழப்போகும் இடத்தில் பிக்கல் - புடுங்கல் இருத்தல் கூடாது என்றால், என்னவாக இருக்க முடியும்? போரோடு தின்ன மாட்டுக்குப் புடுங்கிப் போட்டாக் கட்டுமா? அம்மா அடிக்கடி சொல்லும் வாசகம் நினைவுக்கு வந்தது. அகழ்தல், பறித்தல், பிடுங்குதல்... பனி மூட்டம் கலைவது போல் தோன்றியது. பிடுங்குதல், உலக வழக்கில் புடுங்கலான கதை புலப்பட்டது. நீண்ட சிந்தனைக்குப் பிறகே பிக்கல் என்பது பிய்த்தல் என்பதன் மரூஉ மொழி என்று உணர்ந்தேன்.

சார் இன்றைக்குப் பிச்சு ஓத்றிட்டீங்க? பாகவதர் முகமெல்லாம் பல்! குரங்கு ஆப்பத்தைப் பிய்த்து, பங்கு பிரித்தகதை நினைவிற்கு வந்தது. நூறு வேலி நிலமுடைய குடும்பத்தில், நாலு பிள்ளைகள் இருந்தால், நாலு பேரும் பிரித்துக் கொண்டால் நூறு இருபத்தைந்தாகி விடும். சொத்துப் பிரியாது இருக்க வேண்டு மென்றால் ஒரே பையனாக இருக்க வேண்டும். பிக்கல் - பிரிக்கல் - புரிந்தது! புடுங்கல்! ஒரே பையன்தான்! ஆனால் சகோதரிகள் நால்வர் என்றால், அவ்வப்பொழுது வந்து, சீர் என்ற பெயரில், கொஞ்சம் கொஞ்சமாகப் புடுங்கிக் கொண்டு போய்விட்டால் வாழப் போகும் மகளுக்கல்லவா நஷ்டம்! கல்யாணம் இன்னும் ஆகாத இளைஞர்களே! நீங்களும் பிக்கல் புடுங்கல் இல்லாத இடம் கிடைக்கிறதா என்று பாருங்களேன்.

## ஏனோ தானோ!

பிள்ளையைப் பெற்ற பெற்றோரிடம் கேட்டுப் பாருங்கள் பையன் எப்படி இருக்கிறான். என்னத்தைச் சொல்ல... ஒரு சோக முனகல். ஏன் சரி இல்லையா? ஒரே பையன் ! நன்கு படிக்க வைத்தார். பெரிய வேலை செய்கிறான்! சின்ன பிள்ளையிலிருந்து அவனை எனக்கும் தெரியும். ஒன்றும் கெட்ட பையன் இல்லை! அவர் சொன்னார் ஏனோ தானோ என்று பேசுகிறான்.

ஏனோ தானோன்னு குதிச்சில்ல! அதான் இப்படி! ஏனோ தானோன்னு நடந்தபோதே, இது நடக்கும் என்று நான் எதிர்பார்த்தேன்.

நமது குடும்பங்களில், அடிக்கடி வேறு வேறு ஒலி அளவுகளில் நாம் கேட்கும் உரையாடல்கள் இவை. கேட்டுப்பாருங்கள்; எது சொன்னாலும் ஆயிரம் எதிர் கேள்விகேட்கிறான் அந்தப் பயல். முன்னையெல்லாம், என் பேச்சுக்கு எதிர் பேச்சுப் பேசமாட்டான்.



www.saivamonline.com

எல்லாம் அவன் அம்மா கொடுக்கும் தைரியம். மனைவி மீது ஒரு பாய்ச்சல்! இந்த வீட்டிலே இருக்கிற எல்லாம் நான் வாங்கிப் போட்டது! புதிதாக ஒரு வண்ண மீன் தொட்டி வாங்கி வைத்திருக்கிறான். தொடப்போனால், அப்பா ஜாக்கிறதை, தொடாது பாருங்கப்பா. ஆணவம்! அவன் வாங்கி வைத்த பொருளாம்; தான் என்ற கர்வம்.

எதிர்பார்ப்பில் வளர்த்த தந்தை மனம் சின்ன சின்ன சலனங்களைக் கூடத் தாங்கும் சக்தி அற்றதாகி விடுகிறது.

அவை கிடக்கட்டும்; அது என்ன? ஏனோ தானோ? ஏன் என்பது ஏனோவாகிவிட்டது, தான் என்பது தானோவாக மாறியிருக்கிறது. நம் பிள்ளைகள், குழந்தைகள் போலவே இருந்து விட வேண்டும் என்று எதிர்பார்ப்பதில், என்ன நியாயம் இருக்க முடியும். மனைவி நம் செயல்களை ஏன் என்று கேட்டதில்லை. அவளுக்கும் கேட்கத்தெரியும்; நீங்கள் அனுமதிக்கவில்லை.

மகன் கேட்பான்; கேட்க வேண்டும்! நான் ஏன் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்று இராமன் கேட்டிருக்க வேண்டும். நான் ஏன் ஐவரையும் மணக்க வேண்டும் என்று பாஞ்சாலி கேட்டிருக்க வேண்டும். நாம் எதிர் கேள்விகளை விரும்புவதில்லை. அதனால்தான் இராமனை நமக்குப் பிடிக்கிறது. தான் என்பது ஆணவம் என்பது, தத்துவத்துக்குச் சரி. உன்னால் முடியும் தம்பி என்ற போது, தான் எழுந்தால் தான் வெற்றி சித்திக்கும். ஏன் என்பது அவமரியாதையில் பிறவாது அறிவு பூர்வமாகப் பிறந்தால், தான் என்பது, கர்வமாக இல்லாது தன்னம்பிக்கையில் தழைத்தால் ஏனோ தானோ குற்றமாகாது.

## அஞ்சுக்கு ரெண்டு

கிராமத்தில் பால்ய சினேகிதனைப் பார்த்தேன். தென்னந்தோப்பு, திருட்டுமாங்காய், தாமரைக்குளம், குச்சி ஐஸ் எல்லாம் நிழலாடின! ஏய் எத்தனை பிள்ளைடா? அஞ்சு என்று, அஞ்சாது சொன்னான். இந்தக் காலத்தில் ஏன் இப்படி? கேட்டேன். எல்லாம் கடவுள் கொடுத்தார் என்று கபடமில்லாது பேசினான். முத்தான வாழ்வுக்கு மூன்று போதும் என்ற காலத்தில் மூன்று பெற்றிருக்கிறான். இனிமையான இல்லறத்திற்கு இரண்டு போதுமே என்ற கோரிக்கையையும் பரிசீலித்திருக்கிறான். பாவி என்பதா? அப்பாவி என்பதா? வேறு தடம் மாறினேன். பிள்ளைகள் எல்லாம் எப்படி? நல்லபிள்ளைகளா? நன்கு படிக்கிறார்களா? நல்ல குணங்களோடு



www.saivamonline.com

வளர்கிறார்களா? கேள்வியின் நோக்கம் இவைதாம். அவன் சொன்னான், அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை, நான் வியந்தேன்! அதாண்டா! ரெண்டு தேறும்! மூணு மோசம் என்றான். பள்ளித் தேர்விற்கு அஞ்சுக்கு ரெண்டு சரிதான்! நூற்றுக்கு நாற்பதாயிற்று! குழந்தைகள் எல்லோரும் நன்கு வளர்ந்தாக வேண்டுமே! இதில் எப்படி, இவன் விழுக்காடு கணக்குப் போடுகிறான்? கவலை அடைந்தேன்! அளவாகப் பெற வேண்டும்; இயலாவிடின் அறிவோடாவது வளர்க்க வேண்டாமா? ரெண்டு பசங்க பரவாயில்லை; மத்த மூணும் மாடு மேய்க்கத் தாம் லாயக்கு! துள்ளித் திரிந்த பருவத்தில் என் துடுக்கை அடக்கி, என்னைப் பள்ளிக்குச் செல் என்று சொல்லாத என் தந்தை பாதகனே என்று, அவர்கள் ஒரு நாள், உரக்க இவனைப் பேசத்தாம் போகிறார்கள். அவையத்து முந்தியிருக்க முயலாத, விபத்தில் தந்தையாகிவிட்ட, இத்தகைய பெற்றோர்கள் இங்கே ஏராளம்.

கறவை ஒழிந்த மாடு அஞ்சுக்கு ரெண்டு தருவதைச் சொல்கிறார்களா? வேறு உண்டா? அது ஒரு பொருள் பொதிந்த தொடர். சைவம் வழங்கிய அருட் கொடை; அஞ்சு என்பது நமசிவாய என்ற ஐந்தெழுத்து. நமச்சிவாய வாழ்க என்று ஐந்தெழுத்தை ஓத வேண்டும். நேரமில்லையா, அவற்றுள் சிவ என்ற இரண்டெழுத்தையாவது ஓதுக. சிவசிவ என்றிடத் தீவினை மாளும் என்பது திருமந்திரம். எப்படி இருந்தது எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா?

## புழு பூச்சி

முற்றிலும், முரண்பாடான வாதம் செய்வாரை நோக்கி, தமிழில் ஓர் இலக்கண உரைகாரர், உங்கள் வாதம், தாயை மலடி என்றது போல என்கிறார். ஒரு குழந்தையோடு நிறுத்திக் கொள்ளும் பெண்ணை, ஒரு வகையில், இவளும் மலடிதான் என்கிறார் வைணவ ஆசாரியர் ஒருவர். இல்லறத்தின் அழகும் நிறைவும், பிள்ளைப்பேற்றில்தான் அமைகிறது. நன்கலம் நன் மக்கட் பேறு என்கிறார் வள்ளுவர். திருமணமாகிச் சிலமாதமான அந்த இளைஞனைக் கிராமத்துப் பெரியவர் ஒருவர், தம்பி ஏதேனும் விசேஷம் உண்டா என்றார்.

சேஷம் என்றால் பிரசாதம்- வி என்றால் மேலான என்பது பொருள். இல்வாழ்வின் மேலான, இறைவன் வழங்கும் பிரசாதம் பிள்ளைப் பேறு தானே! இளைஞன், என்ன ஐயா சொல்கிறீர்கள் என்று கேட்டான். அதாம்ப்பா புழுப்பூச்சி ஏதேனும் உண்டா? என்றார்.



www.saivamonline.com

அதுவும் அவனுக்குப் புரியவில்லை. நமக்கும்தான். இருபது ஆண்டு இல்லறத்தில் வாழ்ந்தும், மகப்பேறு வாய்க்காத பெண் ஒருத்தி, கணவனிடம், நான் இறந்த பின் என்னை எரிக்காதீர்கள்! புதைத்து விடுங்கள் என்றாள். ஏன்? அப்போதாவது என் வயிற்றில் ஒரு புழு-பூச்சி உண்டாகட்டும் என்றாளாம் அவள். பிள்ளை குட்டி உண்டா? என்றால் புரிகிறது! அது என்ன புழு பூச்சி? மறைவாகச் சொல்ல வேண்டும்; அதனையும் நாகரிகமாகச் சொல்ல வேண்டும்; அதனையும் நயம்படச் சொல்ல வேண்டும் என்பது தமிழ் மரபு. தொடரின் போக்கைப் பார்த்தால் புழு என்பது ஆண் குழந்தையைக் குறித்து வந்ததாகத் தெரிகிறது.

பூச்சி என்பது பெண் குழந்தையாகலாம். கூட்டுப்புழுவாக, அப்பாவையே அரித்தெடுத்து ஒரே இடத்தில் உழலும் மகன் என்றா புழுவைக் கூறியிருப்பார்கள். புழு, இடம் பெயராது ஒரே நிலத்தில் வாழ்வது. பூச்சி, சிறிது நாள் கூட்டில் இருந்துவிட்டுச் சிறகு முளைத்ததும் பறந்து போய் விடுவது. மனோன்மணியம் பாடிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, அட! நமது தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடியவர் நிலத்தை வளப்படுத்தும் நாங்கூழ்ப் புழுவை நுட்பமாகப் படம் பிடிக்கிறார். நாங்கூழ்ப்புழு உழவனின் தோழன். நல்ல மகனும் அப்படித்தான். பட்டாம் பூச்சிப் போல், தந்தை வீட்டில் சுற்றிச் சுழலும் பெண் ஒருத்தி இல்லை என்றால் என்ன இன்பம் இருக்கிறது. பாரதிக்குப் புரிந்திருந்தது. ஆண்-பெண் என்பதைப் புழு, பூச்சி என்று கண்டு காட்டிய நம் முன்னோர், கூர்த்த அறிவால் நம்மைக் கொள்ளை கொண்டு விடுகிறார்கள்.

## திண்டாடித் தெருவில் நிற்பாய்

குந்தித் தின்னா குன்றும் கரையும் என்பது ஒரு பழமொழி. தான் முயலாது, பெற்றோர் ஈட்டிய செல்வத்தில் உண்டு மகிழ்ந்திருந்த ஒருவனை அவன் மனைவி, பழையது சாப்பிட வாங்க என்று கூப்பிட்டுச் சுடு சோறு பரிமாறினாள். கணவன் விழித்தான். மாமா ஈட்டியது பழையது தானே. புதிதாக, நீங்கள் என்ன சம்பாதித்தீர்கள் என்றாள். கணவனுக்குப் புத்தி வந்தது. டேய் நீபோற போக்கப்பாத்தா, நீ திண்டாடித் தெருவில் நிற்கப் போகிறாய் என்று தெரிகிறது என்று, ஒரு தாய் எச்சரிக்கிறாள். திணடாட்டம் என்றால் செயலற்ற நிலை எனப் புரிகிறது. சொல் மூலம், புரிய வேண்டுமே! பெண்டாட்டி ரெண்டு கட்டித் திண்டாடித் தெருவில் நின்று என்ற பாடல் வரி ஒன்றும் நினைவில் வருகிறது.


www.saivamonline.com

ஆட்டம் என்பது கூடப்புரிகிறது. ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி ஓய்ந்து விட்டான் என்பது விளங்கவில்லையா? திண்டாட்டம் என்றால் என்ன? திண்டுக்கல் - திண்டி வனம் என்பனவற்றில் வரும் திண்டு தலையணை என்ற பொருளைத் தருகிறது. உருண்டை வடிவான ஒருவகைத் தலையணை அது. தலையணைச் சுகம் என்பது மறைமுகமாகக் கழி காமத்தைக் குறித்ததா? சலம் புணர் கொள்கைச் சலதியோடு ஆடி, பெரும் பொருள் குன்றம் தொலைத்து, மதுரை வீதிக்கு வந்த கோவலனோடு இது பொருந்துகிறதா? மனைவி சுகத்தில் மூழ்கி, நாடு இழந்த சீவகன் தந்தையை இங்கே ஒப்பிடலாமா? மலரிலும் மெல்லியது காமம், சிலர் மட்டுமே அதன் செவ்வி அறிவார். அக்காலத்தில், கிராம வீடுகளில், திண்ணைகளின் ஓரத்தில் தலை வைத்துப் படுக்க வசதியாக, வழு வழு மேடை ஒன்றை அமைத்திருப்பார்கள்.

மாப்பிள்ளைத் திண்டு என்று அதனைக் கேலியாகக் கூறக் கேட்டிருக்கிறேன். ஒரு வேளை, ஆன முதலில் அதிகம் செலவானால், மனைவி சினக்க, தெருத் திண்டில், படுத்துப் பின் வீதிக்கு வரும் நிலை வந்து சேரும் என்ற பொருளில் வந்ததோ தெரியவில்லை. பிறசமயத்தார் கலப்பால் வந்த சொல் திண்டு என்பது. கொண்டாட்டத்திற்கு எதிர்ச் சொல்லாகத் திண்டாட்டம் காணப்படுகிறது. யாராக இருந்தாலும், எதிலும், எல்லை கடந்தால் திண்டாடித் தெருவிற்கு வந்தே ஆக வேண்டும். நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய எச்சரிக்கைத் தொடர் இது.

## நக்கல்

உண்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் சொல்லுக்கும், அது உணர்த்துவதாகக் கருதும் பொருளுக்கும் நேரடியான சம்பந்தம் ஒன்றுமில்லை. சொல்லின் பொருள் எல்லாம், சொல்லுவானின் கருத்தைச் சார்ந்தே அமையும். சொல்பவர் தொல்காப்பியர். இளங்கோவடிகள், தாமே கதை நடத்தும் போது, காவிரி என்பார். வட்டார மக்கள் வழக்கைப் பதிவு செய்யும் போது நடந்தாய் வாழி காவேரி என்பார். சொல், அதை உச்சரிப்பாரின் தரம், அச்சொல்லுக்கு அவர் கருதும் பொருள், இவற்றைச் சார்ந்தே மதிப்புப் பெற இயலும்.

இன்று, இழிந்த பொருள் தருவதாகக் கருதப்படும் சொற்களுள் ஒன்று நக்கல் என்பது. என்ன நக்கலா? இந்த நக்கலடிக்கிற வேலை எல்லாம் நம்மகிட்ட வச்சுக்காதே! தரம் தாழ்ந்த நிலையில் செய்யப்படும்


www.saivamonline.com

கிண்டல், கேலி என்ற பொருளில் இன்று நக்கல் மதிப்பிழந்து நிற்கிறது. நக்கன் என்ற சொல் திரிபுரம் எரிக்கும் கால் சினந்த சிவனைக் குறித்து வருகிறது. நக்கலின் மூலத்தை ஆராய்ந்தால், அது நகுதல் என்ற சொல்லின் திரிபு என்பது புலனாகிறது. நகலும், சிரிப்பும் ஒன்று என்று நம்மில் பலர் தவறாகக் கருதுகின்றோம். இடுக்கண் வருங்கால் நகுக என்றால் சிரிக்க என்றா பொருள்? எள்ளி நகையாடுக, ஏளனம் செய்க என்பது பொருள். இன்றைய இந்தத் துன்பத்துக்குக் காரணமான, நேற்றைய தவறு என்ன என்பதனைக் கண்டறிந்து அதனைச் செய்த நம்மை நாமே இகழ்ந்து கொள்ளல் என்பது தானே பொருள். நகையாடும் போது கூட, அதில் மற்றவரை இகழும் தொனி கலந்து விடக் கூடாது என்று வள்ளுவர் எச்சரிக்கிறார். நக்கல் கிண்டலாக இருக்கும் வரை சிரித்து மகிழ வைக்கிறது. இகழ்ச்சி கலக்கும் போது சூடேற்றி விடுகிறது.

யான் நோக்கும் காலை... என்ற குறளில் தான் நோக்கி மெல்ல நகும் என்றுமுடிக்கிறார் வள்ளுவர். நண்பர்களுக்கு இடையில் நக்கல் வாழ்ந்திருக்கும். கணவன் மனைவிக்கு இடையே எல்லை கடந்தால் குற்றப்படும். பெரியவர்களை நோக்கி இது கூடவே கூடாது என்பது புலனாகிறது. நக்கல் உப்பைப் போல; கூடினாலும் சுவை கெடும்; குறைந்தாலும் பயன் தாராது.

## மடையன்

ஓர் ஆதீனத் தலைவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். வரவேற்று உபசரித்தார். பக்கத்தில் நின்ற, காறுபாறு தம்பிரானை அழைத்து. எங்கே அந்த மடையன், அவனை அழைத்து இவருக்குக் காபி கொடுக்கச் செய் என்றார். அந்த நபர் வந்தார். ஐயாவுக்குக் காபி கொடு. பவ்வியமாக அந்த நபர் அழைத்துச் சென்று காபி கொடுத்தார். நான் மீண்டும் சந்நிதானத்தோடு உரையாடத் தொடங்கினேன். காபி கொடுத்தாரே அவர் பெயர் மடையனா என்றேன். அவர் சிரித்துக் கொண்டே அவன் பெயர் வேலன் என்றார். கோபத்தில் மடையன் என்றீர்களோ! இல்லை! அவன் செய்யும் தொழில் அது என்றார். எனக்கு அவ்வளவாக விளங்க வில்லை. பஞ்சதந்திரக் கதைகளில் பரமார்த்த குருவின் ஐந்து சீடர்களில் ஒருவன் மடையன் என்று படித்திருக்கிறேன். அங்கே மடையன் என்றால் அறிவில்லாதவன் என்பது பொருள்.

சைவ ஆதீனங்களை மடம் என்கின்றனர். அதில் மடம் என்றால் முனிவர் வாழிடம் என்று பொருள் அறிவேன். பெண்களுக்கு உரிய

நாற்குணங்களுள் ஒன்று மடம் என்பது. ஒன்றைச் சொன்னால் அதையே பிடித்துக் கொண்டு, அக்கருத்தை மாற்றிக் கொள்ளாத பண்பு அது. கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்பர். இவன் தான் உன் கணவன் என்று காட்டப் பற்றிக் கொள்ளும் பெண், கோபத்தில் இவன் உன் கணவன் அல்லன் என்று, தந்தையே கூறினாலும் ஏற்காத, தமிழ்ப் பெண்மையின் உயர் குணம் அது. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான் என்ற ஒரு தொடர் உண்டு. குருநாதனுக்கு நம் நெஞ்சில் இடம் கொடுத்தால், அவன், நம் மடத்தை, அறியாமையை அகற்றுவான் என்பதே உண்மைப் பொருள்.

அவையெல்லாம் இருக்கட்டும். அந்த மடையன் யார் என்கிறீர்களா! பண்டைத் தமிழில் மடையன் என்றால் சமையல் தொழில் செய்பவன் என்பது பொருள். கோயில், மடங்களில் சமைக்கும் இடம் மடைப்பள்ளி எனப்படும். நளனை, அடு மடையா என்று புகழேந்தி குறித்துள்ளார். கையறு மடைமையின் காதலர்க்கு ஆக்கி என்பது சிலப்பதிகாரம். சமையல் ஆள் துறவிகளுக்கு மனைவிக்கும் மகனுக்கு நிகராக அன்பு செய்பவன், அவனைத் தவசிப் பிள்ளை என்பார். தவம் செய்து பெற்ற பிள்ளை போன்றவன் என்பது கருத்து. இனி உங்களை யாராவது மடையா என்றால், என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேளுங்கள்! விழிப்பார்கள்; நாம் மகிழலாம்.



www.saivamonline.com